<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 42/2024 நாள்: 11.11.2025 வா.சா. 1– ராமநாதன்**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -</u>**

பிரதிவாதி வங்கி எனக்கு அளித்த சேவையில் என்ன குறைபாட்டை செய்தார்கள் என்றால் நான் வைத்திருந்த லாக்கரை திறக்க பிரதிவாதி வங்கிக்கு சென்ற போது அங்கு லாக்கரின் பொறுப்பு அதிகாரி உடன் வராமல் லாக்கரின் கதவு மற்றும் BIN ஐ ஒரு Messenger வந்து திறந்ததால் எனக்கு சேவை குறைபாடு ஏற்பட்டது. நான் அது சம்பந்தமாக நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன். மேற்படி நுகர்வோர் நீதிமன்றம் நான் தாக்கல் செய்த வழக்கை பரிசீலனை செய்து பிரதிவாதி வங்கி சேவை குறைபாட்டிற்காக இழப்பீடு தர உத்தரவு பிறப்பித்தார்கள். நுகர்வோர் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி என்னுடைய வங்கி கணக்கிற்கு பிரதிவாதி வங்கி இழப்பீட்டு தொகையை செலுத்தியது நான் ஆட்சேபனை தெரிவித்த பிறகு பிரதிவாதி வங்கி வரைவோலை மூலமாக எனக்கு இழப்பீட்டு தொகையை தந்தார்கள், நான் மேற்படி வரைவோலையை வாங்க மறுத்துவிட்டேன். ஏனென்றால் எனக்கு நுகர்வோர் நீதிமன்றம் வழங்கிய இழப்பீடு குறைவாக இருந்ததால் நான் மாநில நுகர்வோர் நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்துள்ளேன். மேற்படி மேல் முறையீடு தற்போது நிலுவையில்

உள்ளது. நான் நுகர்வோர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவிற்கு எதிராக பிரதிவாதி வங்கி தாக்கல் செய்த எதிருரையில் என்னை பற்றி அவதுறாக தெரிவித்துள்ளதால் நான் அதற்கு இழப்பீடு கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி வங்கி தாக்கல் செய்த எதிர் உரையில் Chronic Defaulter என்று தெரிவித்தார்கள் அதற்கு எதிராகவும், இந்த இழப்பீடு கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் வாங்கிய கடனுக்கான தவணை தொகையை சரியாக செலுத்தாத காரணத்தினால் தான் அவ்வாறு வங்கி எதிருரையில் தெரிவித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது கடன் கணக்கு NPA வாக தீர்மானிக்கப்பட்டது என்றால் சாட்சி கடனுக்கான வட்டியை கூடுதலாக சேர்த்து தவணை தொகை கேட்டார்கள், NPA என்று எனது கடனை வங்கி தீர்மானித்தது தவறு என்று கூறுகிறார். நான் தவணை தொகையை சரியாக கட்டாததால் தான் NPA என்று எனது கடனை வரையறுத்தார்கள் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பை வங்கிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். எனக்கு வங்கி பதிலறிவிப்பு தந்தார்கள். அதிகமாக வசூல் செய்த வட்டி தொகையின் சிறு பகுதியை எனக்கு திரும்ப தந்தார்கள். பிரதிவாதி வங்கி அனுப்பிய பதிலறிவிப்பில் 6வது பத்தியில் என்னுடைய காரணத்தினால் தான் NPA என்று எனது கடன் கணக்கு வரையறுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறு.நான் ஏற்கனவே State Bank of India வில் நான் மேலாளராக பணிபுரிந்ததால் என் மீது உள்ள நம்பிக்கையின் அடிப்படையில் லாக்கரை திறக்கும் போது ஒரு Messenger ஐ

அனுப்பி வைத்தார்கள் என்றால் அது சட்டப்படி தவறு என்று சாட்சி கூறுகிறார். பிரதிவாதி வங்கி நுகர்வோர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எதிருரையில் பிரதிவாதிகள் மீது நன்றியும், பெருமிதமும் கொள்ளாமலும், பிரதிவாதியின் வங்கியின் புகழுக்கு பொதுமக்கள் மத்தியில் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் நுகர்வோர் நீதிமன்றத்தில் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லியுள்ளதால் அதற்கும் இழப்பீடு கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி வங்கி மேற்படி எதிருரையை நுகர்வோர் நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். பிரதிவாதி வங்கி எனது பெயரை களங்கப்படுத்தும் வகையில் மேற்படி எதிருரையில் உள்ள விவரத்தை பத்திரிக்கையிலோ, பொதுமக்களிடமோ விநியோகிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி எதிருரையில் நான் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படுவதாக பிரதிவாதி வங்கி தெரிவித்துள்ளது, அதற்கும் இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி எதிருரையால் எனக்கு பொதுமக்கள் மத்தியிலும், எனது நண்பர்கள் மத்தியிலும் களங்கம் ஏற்பட்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் நுகர்வோர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு பிரதிவாதி வங்கி பதில் அளித்துள்ளது, அவை பொதுமக்கள் மத்தியிலோ, எனது நண்பர்கள் மத்தியிலோ என்னை களங்கப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நீதிமன்ற நடவடிக்கையின் போது தெரிவித்துள்ள கருத்துக்கள் அவதுறாக கருதமுடியாது என்றால் சரியல்ல. நான் கோருகின்ற இழப்பீட்டு

தொகையை பிரதிவாதி வங்கி செலுத்த கடமைபட்டவரல்ல என்றால் சரியல்ல. எனக்கும், அப்போது பிரதிவாதி வங்கி கிளையில் பணிபுரிந்த மேலாளருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் அவரை பழிவாங்க வேண்டி வங்கிக்கு எதிராக இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே வங்கியில் மேலாளராக பணிபுரிந்ததால் எனக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன் என்றும், அவ்வாறு கிளை மேலாளர் கொடுக்காததால் அவர்களை அலைகழிக்கவேண்டும் என்று பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோவிந்தராஜ் வகையறா மீது இழப்பீடு கோரி இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இழப்பீடாக ரூ.88,15,000/- கோரியுள்ளேன் என்றால் சரிதான். நான் யாராவது ஒருவர் மீது இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்யும் குணமுடையவர் என்றால் சரியல்ல. மேற்படி குணாதியசத்தின் அடிப்படையில் இந்த வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.11 17:07:29 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.